# ★ மாவீரர் வாரம் நாளை எழுச்சியுடன் ஆரம்பம்

விலை ரூபா 5-00

# ஈழநாடு
EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 4 இதழ் 289
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 20-11-1994

## எங்கும் விழாக்கோலம்

(யாழ்ப்பாணம்)
மாவீரர் வாரம நாளை 21 ம் திகதி ஆரம்பமாகவுள்ளது, நாளை காலை 9 மணிச்கு தேசியக் கொடி ஏற்றி கொடிவணக்கத்துடன் மாவீரர் வாரம் ஆரம்பமாகும்.

மாவீரர்வாரத்தையொட்டி வீதிகள் மற்றும் பொது இடங்கள் உட்பட பார்க்குமிடமெல்லாம் மஞ்கள், சிவப்பு கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளதுடன் முக்கியமான சந்திகள். வீதிகள் தோறும் மாவீரர் புகழ்பாடும் வளைவுகளும் அமைக்கபபட்டுள்ளதுடன் இவ் இடங்களில் பதாகைக

(6ம் பக்சும் பார்க்க)

## மாவீரர் ஆலயங்களில் வீர வணககம்

(யாழ்ப்பாணம்)
மாவீரர் ஆரம்ப நாளாகிய நாளை 21ம் திகதி திங்கள் காலை 9-00 மணிக்கு யாழ். மாவட்டத்தின் சகல வட்டப் பிரதேசங்களிலும் மாவீரர் நாளையொட்டி அமைக்கப்பட்டுள்ள மாவீரர் ஆலயங்கள் வைபவ ரீதியாக; மரிப்பு வணக்கம் செலுத்துவதற்காக திறந்துவைக்கப்படவுள்ளன.

இவ்வாலயங்கள் திறக்கும் வைபவங்களில் அந்தந்த வட்டங்களைச் சேர்ந்த மாவீரர்களின் நினைவுருவப் படங்கள் மக்களின் வீரவணக்கத்திற்காக வைக்கப்படவுள்ளதால் அம் மாவீரர்களின் பெற்

(6-ம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளின்
# போர் இடைநிறுத்தம் முடிவு;
# அரசு தரப்பினர் உதாசீனம்

## - நல்லெண்ண சமிக்ஞைக்கு பதிலில்லை -

[யாழ்ப்பாணம்]
**ஜனதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் புதிய அரசுக்குநல்லெண்ண சமிக்ஞையாக தமிழீழ விடுதலைப்புலிகள் அறிவித்த ஒரு வார கால போர் இடைநிறுத்தம் அரசின் பதிலெதுவும் கிடைக்காத நிலையில் நேற்று முடிவடைந்துள்ளது. விடுதலைப்புலிகளின் இந்த நல்லெண்ண அறிவிப்பை அரசு உதாசீனம் செய்துள்ளதாக குற்றம் சாட்டப்படுகிறது.**

தமிழீழ விடுதலைப்புலிகள் அறிவித்த ஒருவாரகால போர் இடைநிறுத்த அறிவிப்பு நேற்றுடன் முடிவடைந்துள்ளதாக புலிகளின் குரல் தெரிவித்தது.

சிறிலங்காவில் புதிதாக முழுமையான அதிகாரங்களுடன் தெரிவு செய்யப்பட்டிருக்கும் திருமதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் அவரின் அரசிற்கும் நல்லெண்ணத்தை தெரிவிக்கும் ருநல்ல சமிக்ஞையாக விடுதலைப்புலிகள் நேற்று

(2-ம்பசக்கம பார்க்க)

## கொழும்பு நகரிலும் தீவிர பாதுகாப்பு

(கொழும்பு]
மாவிரர் வாரத்தில் கொழும்பிலும் தாக்குதல் நடைபெறலாம் என பாதுகாப்பு வட்டாரங்கள் எச்சரிக்கை செய்துள்ளன.

இதனையடுத்து கொழும்பு நகர் மற்றும் அதன் அயற்புறங்களிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப் பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு நகரின் கேந்திர முக்கியத்துவம்வாய்ந்த இடங்களில்பொலிசார்தீவிரரோந்து கடமைகளில் ஈடுபட்டு வருகின்றனர். ரி

## தாககுதல்களை எதிர்நோக்க இராணுவம் தயார் நிலையில்!

(கொழும்பு)
நல்லெண்ண சமிக்ஞையாக விடுதலைப்புலிகள் ஒரு வார காலத்திற்கு நிறுத்தி வைத்திருந்த இராணுவத் தாக்குதல் நிறுத்தகாலஎல்லை முடிவடைந்துள்ளதால் இராணுவத்தினர் மீது புலிகள் பெரும் தாத்குதலை நடத்தலாம் என்று கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன,

புலிகளின் இத் தாக்குதல்களை எதிர்பார்த்து வட கிழக்குப் பகுதிகளிலுள்ள இராணுவத்தினரும் உஷார்நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

விடுதலைப் புலிகள் இயக்கத்தால் அனுஷ்டிக்கப்படவிருக்கும் மாவீரர் தினம் அடுத்த வாரம் ஆரம்பமாகவிருப்பதனுல் மாவீரர் நாளிலும்

(6-ம் பக்கம் பார்க்க)

## அரசியல் சட்டசீர்திருத்த ஆலோசனை வெளியிடப்படும்

(கொழும்ப)
பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் தனது அரசியல் சட்ட சீர்திருத்தங்கள் பற்றிப ஆலோசனைகளை எதிர்வரும் 24ம் திகதி வியாழக்கிமை வெளியிடுமென்று நீதி அரளயலமைப்பு விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் அறிவித்துள்வார்.

இதுபற்றி அமைச்சர் பீரிஸ் மேலும் கருத்து வெளியிடுகையில் ஜனதிபதி ஆட்சி முறைனய ஒழிப்பது பற்றிய ஆலோசனைகள் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறும் கூட்டத்தில் வெளியிடப்படுவதுடன் வேறு சில திருத்தங்கள் பற்றிய ஆலோசனைகளும் வெளியிடப்படும் என்றும் கூறிஞர். வி-ரி

## தாக்குதல் நிறுத்த காலத்தில் படையினர் சுற்றிவளைப்பு!

### 3 போராளிகள் வீரச்சாவு

[மட்டுநகர்)
விடுதலைப்புலிகளின் ஒருவார கால தாக்குதல் இடைநிறுத்த அறிவிப்பு வெளியான காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகள் மீதும் தமிழ் மக்கள் மீதும் அரசபடைகள் இரண்டிற்கும் மேற்பட்ட தாக்குதல்களை மேற்கொண்டன.

கடந்த 13 திகதி ஞாயிற்றுக்கிழமை இராணுவம் விடுதலைப் புலிகள்இயக்கப்போராளி ஒருவர சுற்றிவளைத்தனர்.

[?ம் பக்கம பார்க்க]

## பங்களாதேஷில் 4 தமிழ் இளைஞர் கைது

(டாக்கா)
பங்களாதேஷ் டாக்கா நகரில் விடுதலைப்புலிகள் என்ற சந்தேகத்தில் நான்கு தமிழ் இளைஞர்களை பொலிசார் கைதுசெய்துள்ளனர்,

விடுதலைப்புலிப் போராளிகள் என்ற சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்ட நான்கு தமிழ் இளைஞகளும் தாம் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் என்று விசாரணையின் போது தெரிவித்தனர்.

இவர்கள் பற்றிய முழு விபரங்களையும் தெரிந்துகொள்வதற்காக, தாம் தமிழ்நாட்டுப் பொலிசாரின் உதவியை நாடியிருப்பதாக பொலிசார் தெரிவித்துள்ளதாக, 'வெரித்தாஸ்' வானெலி தெரிவித்தது. வி-ரி

## அறுபதுகோடி ரூபா செலவில் தொலைத்' தொடர்பு திருத்தம்

]கொழும்பு]
அறுபது கோடி ரூபா செலவில் வடக்கு-கிழக்குப் பகுதித் தொலைபேசித் தொடர்புகள் சீர்திருத்தப்படுமென்று தபால் தொலைத் தொடர்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இத்திட்டத்தின் முன்னேடியாக முதலில் திருமலையில் யுத்தத்திஞல் பழுதடைந்துள்ள நாலாயிரம் தொலைபேசித் தொடர்புகள் சீர்செய்யப்படும். இதைத்தொடர்ந்து அடுத்த ஆறு மாதங்களுக்குள் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் உள்ள அனைத்து தொலைபேசித் தொடர்புகளும் சீர்திருத்தப் பட்டுவிடுமென்று மேற்படி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. வி-ரி

# பிரதி அமைச்சர் நியமனத்தில் பெரும் இழுபறிநிலை

(கொழும்பு)

புதிய பிரதி அமைச்சர்களை நியமிப்பதில் பொதுசனஐக்கியமுன்னணி அரசில்கருத்து வேறுபாடுகள் நிலவுவதைக் காணமுடிகிறது என ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன,

ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கடந்த 17ம்திகதி தமது அமைச்சரவையை நியமித்துக் கொண்டார்,

ஆனால் ஒருவாரம் கடந்த பிறகும் பிரதி அமைச்சர்கள் நியமிக்கப்படவில்லை.

யார் யாரை பிரதி அமைச்சர்களாக நியமிப்பது என்ற சிக்கலாலான நிலை ஏற்பட்டிருப்பதன் காரணமாகவே பிரதி அமைச்சர்கள் நியமனம் தாமதம் அடைந்து வருவதாக தெரிவிக்கப்பட்டது.

நிதி அமைச்சின் பொறுப்பை ஜனாதிபதி சந்திரிகாதன்னிடம் வைத்துக் கொண்டுள்ளார். எனவே பிரதி நிதி அமைச்சர் பதவியை கபினட் அந்தஸ்துள்ள ஓர் அமைச்சருக்கே வழங்கவேண்டிய இக்கட்டான நிலையும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு ஏற்பட்டுள்ளது,

நாடாளுமன்றத்தில் வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பிப்பதற்கு அவசியம் நிதி அமைச்சர் ஒருவரை நியமிக்க வேண்டிய நிலை ஜனாதிபதி சந்திரிகாவுக்கு ஏற்பட்டுள்ளதாவம் அந்தச் செய்திகள் தெரிவித்துள்ளன. இ-ரி

## வரி விளம்பரம்

### 11-11-94 முதல் வியாழ மாற்ற பலன்கள்

ரூபா 10/- சத்யாவின் எல்லாராசிகளின் பலன்ள் எங்கும் கிடைக்கும் பாடசாலைப் புத்தகங்கள், அலுவலக உபகரணங்கள்,, சஞ்சிகைகளுக்கு தினேஷ் புத்தகசாலை, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். (சி-1324)

### விற்பனைக்கு

தரத்தில் உயர்ந்த தில்க்கி, பாமஸ், காப்பிலி, பெண்டம், கினிக்கோழி, வெள்ளடயன், வான்கோழி, தாரா, மணித்தாரா, போன்றவற்றின் அடை வைப்பதற்கான நல்லின முட்டைகளை உடன் பெற்றுக் கொள்ள தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: மேஜர் பிரதாப் செட்டிப் பண்ணை, இராஜ வீதி, கோப்பாய், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம். (ஏ-4511)

### தவறிவிட்டது

18-11-94 அன்று முக்கியமான B. A. பாடப்புத்தகங்களும், பாடக்குறிப்புகளும், 1 யீன்சும் அடங்கிய நீலநிற சீலைப்பை முத்திரைச் சந்திக்கும் கல்வியன்காட்டுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் M மகேஸ்வரன் (குஞ்சண்ணை) 82, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு, விலாசத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். சி-1322)

### பாலருக்கான அனுமதி

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மேற்று அமெரிக்கன் மிஷன் வித்தியாலயத்தில், பாலர்களுக்கான (நேசறி) அனுமதி வழங்கப்படவுள்ளது.

31-1-95ல் $3\frac{1}{2}$ வயது பூர்த்தியான சகல பிள்ளைகளும் இலவசமாக இப்பாடசாலையில் அனுமதிக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. சி-ரி

## இன்று

(யாழ்ப்பாணம்)

தமிழ்ச் சோதிடர் ஆய்வு ஒன்றியத்தின் வாராந்தப் பயிலரங்கும்,ஆய்வரங்கும் இன்று ஞாயிற்றுக்கிழமைபி பகல்2-00 மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றியப் பணிமனையில் நடைபெறும். இன்றைய நிகழ்வுகள் ஒன்றியத் தலைவர் ஐ. வைத்தியநாதர் தலைமையில் நடைபெறும்.

ஆய்வரங்கில் கூடலங்குடி ஆராய்ச்சி நிறுவன மாணவியும், சோதிடமேதை பார்த்தசாரதியின் சிஷ்யையுமான செல்வி ஜெயவனிதா தில்லையம்பலம் கிரகங்கள் பற்றிய ஆய்வு பற்றி உரையாற்றுவார். -எஸ்

# இந்திய ராணுவ தளபதி மாரடைப்பால் காலமானர்

(புதுடில்லி)

இந்திய இராணுவத்தின் தலைமைத் தளபதி ஜெனரல் டிபின் சந்திர ஜோஸி நேற்று முள்தினம் மாரடைப்பினுல் காலமானர்.

நேற்றுமுன்தினம் காலை ஜெனரல்ஜோஸிகோல்ப்விளையாடிக் கொண்டிருந்தவேளையில்நெஞ்சில் வலி ஏற்பட்டதாகவும் உடனடியாக இவர் புதுடில்லியில்உள்ள இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது உயிர்துறந்தார்.

59 வயதான ஜெனரல் ஜோஸி, கடந்த வருடம் யூலை மாதம் இந்திய இராணுவத்தின் தளபதியாக பதவியேற்றது குறிப்பிடத்தக்கது. -வி

## சாயிபாபா பிறந்ததினம்

(மானிப்பாய்)

சத்யசாயிபாபாவின் 69வது பிறந்ததினம் இம்மாதம் 23-ந் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

இதனையொட்டி 22,23,24 ஆகிய திகதிகளில் 3 தினங்கள் தமது வீடுகளில் சாயிபாபா கொடியை ஏற்றி வைக்குமாறு சாயிபாபா கொழும்பு மத்திய நிலையம் வேண்டுகோள் விடுத்துள்ளது, 71

## தாக்குதல்களை நிறுத்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது ஏற்பட்ட மோதலில் மட்டு அம்பாறை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் மேஜர் கருணாகரன் (உபேந்திரன் மன்னம்பிட்டி வீரச்சாவு அடைந்துள்ளார்) இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளது.

இவருடன் சேர்த்து தாக்குதல் அறிவிப்பு முடிவடைந்த நேற்றுவரை படையினரின் தாக்குதல்களில் மூன்றுபோராளிகள் வீரச்சாவு அடைந்துள்ளனர்'

## விடுதலைப்புலிகளின

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டன் முடிவடைந்த ஒருவார காலத்தை தாக்குதல் அற்ற நாட்களாகக் கடைப்பிடித்து வந்தனர்.

புலிகளின் போர் இடைநிறுத்த காலப்பகுதியில் அரச படைகள் அதனை உதாசீனம் செய்யும் பல செயல்களை மேற்கொண்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒருவார தாக்குதல் இடைநிறுத்த அறிவிப்பு குறித்து புதிய அரசு இதுவரை எதுவித பதில் நல்லெண்ண அறிவிப்புகளும் வெளியிடாது மௌனம் சாதித்து வந்ததன் மூலம் விடுதலைப் புலிகளின் சமாதான நல்லெண்ண அறிவிப்பைஉதாசீனம் செய்துள்ளது ரி

## வீடமைப்பு கடன் வழங்க புதிய வங்கி

[கொழும்பு]

வீடமைப்புக் கடன்களைக் குறைந்த வட்டி விகிதத்தில் வழங்குவதற்காக புதிய வங்கி ஒன்றை வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு ஆரம்பிக்கவுள்ளது.

வங்கிகள் வீடமைப்பு சம்பந்தமான கடன்களுக்கு இப்போது மிகக்கூடுதலான வட்டி விகிதத்தை அறவிட்டுவருகின்றன. இதனுல் வீடுகளைக் கட்டுவதற்கு கடன் பெறுவோர் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனைத் தவிர்க்கும் விதமாகவே இந்தப் புதிய வங்கி அமைக்கப்படவுள்ளது. இந்த வங்கி வீடமைப்புக்கடன்களுக்கு 10 சதவீத வட்டியை அறவிடுவதற்குத் திட்டமிட்டுள்ளது (இ)

## வடமராட்சியில்

# நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்ற ஏற்பாடு

(நெல்லியடி)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால், வடமராட்சிப் பகுதியிலுள்ள நாய்களுக்குத் தடுப்பூசி போடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பின்வரும் திகதிகளில் கீழ்க் குறிப்பிடும் இடங்களில் வைத்து நாய்களுக்குத் தடுப்பூசி போடப்படவுள்ளது.

நாளை, 21ம் திகதி நவிண்டில், கரணவாய் வடக்கு சனசமூக நிலையங்கள், 24ம் திகதி துன்னாலை வல்லியானந்தம், இந்திரம்ஸ் சனசமூக நிலையங்கள், 26ம் திகதி கரவெட்டி கிழவிதோட்டம் சனசமூக நிலையம், 28ம் திகதி கலிகை கோயிற்கடவை சனசமூக நிலையங்கள்.

டிசம்பர் 1ம் திகதி வடமராட்சி கிழக்கு அம்பன் கிராமிய வைத்தியசாலை, 5ம் திகதி உடுப்பிட்டி விநாயகர் படிப்பகம், நாவலடி சனசமூக நிலையம், 8ம் திகதி இலக்கணாவத்தை சனசமூக நிலையம், 10ம் திகதி வல்வெட்டி சனசமூக நிலையம், 12ம் திகதி ஊறணி கொலனி சனசமூக நிலையம், கணபதி படிப்பகம். 19ம் திககி உதயசூரியன் சனசமூக நிலையம், ஆதிகோவிலடி சனசமூக நிலையம், 22ம் தேதி பொலிகண்டி, தெணியம்பை சனசமூக நிலையங்கள். -160

# மலேரிய நோயை தடுக்க நடவடிக்கை

(நெல்லியடி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் பெருகி வரும் மலேரியா நோயைத் தடுக்கும் வகையில், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த 11ம் திகதி காலையில் மலத்தியோன் வீடுகளுக்கு விசிறப்பட்டது.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள அம்பன் குடத்தனை, மருதங்கேணி, நாகர்கோவில், செம்பியன்பற்று ஆகிய பகுதிகளிலேயே மலத்தியோன் விகிறப்பட்டுள்ளது.

மேலும் சில பகுதிகளுக்கு மலத்தியோன் விசிறுவதற்குப் போதியளவு மலத்தியோன் இப்பிரிவில் இல்லாதிருப்தாகவும் கொழும்பிலிருந்து மலத்தியோன் எடுத்து வரப்பட்டு விசிறுவதற்கு நடவடிககை எடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மலேரியா நோய் என இனம் கண்டவர்கள், அதற்கான 5 நாள் சிகிச்சையைக் கட்டாயமாகப் பெறவேண்டும் என்று பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. -160


# நல்லின பழமரக்கன்றுகள் விற்பனை

மாவீரர் தினத்தை முன்னிட்டு 10 வீத கழிவுடன் தேவையான அளவு பெற்றுக் கொள்ளலாம்

விற்பனைக்கென விடப்படும் மரக்கன்றுகளின் விபரம்:

★ ஒட்டுத்தேசி ★ ஒட்டுத்தோடை
★ நெல்லி ★ லாவுலு
★ கொய்யா (1 கிலோ நிறை உடைய) ★ நல்லின மாங்கன்று
★ பப்பாசி (கிட்டு 92) ★ மாதுளை (3 மாதத்தில் பயன் தரும்)

இன்னும் விரைவில் பயன்தரும், கமுகு, தென்னம் பிள்ளை, ஏனைய பழமரக்கன்றுகளும் நியாயவிலையில் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்;-

மேஜர் பிரதாப் செட்டிப்பண்ணை
இராஜ வீதி, கோப்பாய்.

கிளை — 1
பூங்கினியுல் தோட்டம்
(முதன்மைச் செயலகம் முன்பாக)
தமிழீழ
பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
தாவடி

(சி-4512)


## தமிழீழ யாழ். மாவட்ட நீதிமன்றில்

# ஒரு வருடகாலத்தில் 538 வழக்குகள் விசாரணை

(யாழ்ப்பாணம்)

தமிழீழ யாழ். மாவட்ட நீதிமன்று ஆரம்பிக்கப்பட்டு அதன் ஒருவருட சேவையை சென்றமாதம் 22ம் திகதியுடன் பூர்த்தி செய்துள்ளது. இக்காலப்பகுதிகளில் குடியியல் சம்பந்தமான 538 வழக்குகள் விசாரணையின் பின் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றப்பதிவாளர் தெரிவித்தார்,

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்; இந்த ஒரு வருடகாலப்பகுதிகளில் குடியியல் மற்றும் குற்றவியல் சம்பந்தமாக 1477 வழக்குகள் இந்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்குகள் விசாரணை செய்யப்பட்டு விசாரணையின் பின் இதுவரை 538 வழக்குகள் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் 939 வழக்குகளின் விசாரணை நடைபெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். - 162

# ஓடுகள் திருட முயன்ற மூவர் பிடிபட்டனர்

(பண்டத்தரிப்பு)

இடம் பெயர்ந்தவரின் வீட்டுக் கூரை ஓடுகளைக் கழற்றித் திருடிக்கொண்டு போக எத்தனித்த மூவரை, அயலவர்கள் கையும்மெய்யுமாகப் பிடித்துக் காவல்துறையிடம் ஒப்படைத்த சம்பவம் பண்டத்தரிப்பில் இடம் பெற்றுள்ளது.

பண்டத்தரிப்பு - கீரிமலைப் வீதிப் பகுதியில் வயல்வெளிக்குப் பக்கத்திலுள்ள இடம் பெயர்ந்த குடும்பம் ஒன்றுக்குச் சொந்தமான மேற்படி வீட்டில் சிலர் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடுவதை அவதானித்த அயலவர்கள் சிலர், திடீரென நேரில் சென்று பார்த்தபோது மூன்று பேரும் வீட்டுக் கூரை ஓடுகளைக் கழற்றிக்கொண்டு போக ஆயத்தமான நிலையில் இருந்ததை அவதானித்தாகவும், கையும்மெய்யுமாகப் பிடித்த இவர்களையும், கழற்றப்பட்டஓடுகளையும் சங்கானை காவல்துறையிடம் ஒப்படைத்ததாகவும் இது பற்றி அறியப்படுகின்றது. காவல்துறையினர் இவர்களைத் தடுத்து வைத்து மேல் விசாரணை நடத்தி வருகின்றனர். -72

# மாரடைப்பினுல் ஏற்படும் திடீர் மரணங்கள்

வைத்திய கலாநிதி
எஸ். பி. ஆர். சீர்மாறன்

மனிதனுடைய இருதயம் 98 வீதம் இடது நெஞ்சில் மார்புக்கூண்டினுள் இருக்கிறது. 2 வீதம் இடம் மாறி (Dextrocardia) வலது புறத்தில் இருக்கும். வலது இடது என பிரிக்கப்பட்டு மேலே சோணைகள் [Atrium) என்றும் கீழே அறைகள் [Ventricle என்றும் மொத்தத்தில் நான்கு அறைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நாம் உயிருடன் இருப்பதற்கு 'ஒக்ஸிஜன்' என்கின்ற உயிர் வாயுவும் 'குளுக்கோசு' வடிவில் சக்தியும் அவசியம். உடலின் சகல பகுதிகளுக்கும் இரத்தோட்டமே இவற்றைக் காவிச்செல்கின்றது. இதற்காகவே இருதயமானது ஒரு நிமிடத்தில்72 முறை அதாவது ஒரு மணித்தியாலலத்தில் 4,320 முறையும் ஒரு நாளில் 1,03, 680 முறையும் துடிக்கின்றது. இருதயத்திற்குத் தேவையான இரத்தத்தை 'கொரோனரி வெஸல்ஸ்' (Coranory vessels) என்கின்ற இரத்தக்குழாய்களே வழங்குகின்றன. இதில் ஏதேனும் தடைகள் ஏற்படுகின்றபோதே 'மாரடைப்பு' (Heart attack) ஏற்படுகின்றது.

## காரணங்கள்

★ இரத்தக் குழாயில் கொழுப்புக்கட்டி வளருதல்

★ இரத்தக் குழாய்களில் சுருக்கம் (Spasm) ஏற்படுதல்

★ இரத்தக் கட்டிகளினுல் தடை ஏற்படுதல்.

★ கடுமையான இரத்தச் சோகை

★ இரத்த அழுத்தம் கடுமையாகக் குறைதல்

## யாருக்கு ஏற்படும்

1910ம் ஆண்டிற்கு முன்னர் மேற்குலக நாடுகளில் மாரடைப்பு யாருக்கும் ஏற்பட்டதாகவே ஞாபகமில்லை, ஆனுல் அங்கு இன்று இறப்புக்கள் ஏற்படுவதற்கு 50 சதவீதத்திற்கு மேல் மாரடைப்பே காரணமாகும். மாரடைடைப்பு ஏற்பட்டால் முதல் இரண்டு மூன்று மணித்தியாலங்களுக்குள் ஐம்பது சதவீதமானவர்களுக்கு திடீர் மரணம் ஏற்பட்டுவிடுகின்றது. இதற்குத் தப்பியவர்களில் அடுத்த இருபத்தி நான்கு மணித்தியாலங்களுக்குள் மருத்துவ மனையிலிருந்து சிகிச்சை பெற்று வீட்டுக்குச் செல்பவர்களில் முதல் ஒரு வருடத்திற்குள் 12—25 சதவீதமானவர்கள் இறந்து விடுகின்றுர்கள். ஏறக்குறைய 50 சதவீதமானவர்கள்10வருடங்கள் வரை உயிர்வாழ்கின்றுர்கள்.

## வயது

வயது வரவர இரத்தக் குழாய்களில் இயற்கையாகவே பாதிப்புக்கள் ஏற்படும். குறிப்பாக நாற்பது வயதை அடைந்த பின்னர் இந்த பாதிப்பு சற்று அதகமாகவே ஏற்படும்.

## பால்

பெண்களைவிட ஆண்களுக்கு மாரடைப்பு ஆபத்து அதிகரித்துக் காணப்படுகின்றது. ஆனுலும் 'மாதவிடாய் நின்ற பின்னர் (Menopause) இந்த ஆபத்து அதிகரிக்கின்றது.

## பரம்பரை

சிலருடைய குடும்பத்தில் இதன் ஆபத்து அதிகரித்தே காணப்படுகின்றது, எனவே தாய், தகப்பனுக்கு மாரடைப்பு ஏற்பட்டிருந்தால் அல்லது சகோதரர்களுக்கு இளவயதிலேயே மாரடைப்பு ஏற்பட்டிருந்தால் குடும்பத்திலுள்ள ஏனையவர்கள் முன்னெச்சரிக்கையாக அவதானமாக இருப்பது நல்லது.

## கொழுப்புச்சத்து

கொழுப்புச்சத்து அதிகமாக குறிப்பாக கொலஸ்ற்ரேல் செறிவாகவுள்ள உணவுகளை உதாரணமாக, தேங்காய் சம்பல். தேங்காய் எண்ணெய், தேங்காய்ப்பால், நண்டு, இறால், கணவாய், முட்டை, தயிர், இறைச்சி, மாஜரின், சீஸ், போன்ற உணவுகளை அடிக்கடியும் அதிகளவிலும் குறிப்பாக 40 வயதிற்குமேல் உண்பதனைக் குறைப்பது நல்லது. ஏனெனில் இந்த கொழுப்புச்சத்துக்கள் இருதயத்திற்கு இரத்தம் வழங்கும் கொரோனரி இரத்தக்குழாய்களில் படிவதனுல் தடை ஏற்பட்டு 'மாரடைப்பு ஏற்படுகிறது.

## புகைத்தல்

சிகரட் மற்றும் சுருட்டு, பீடி என்பன அடிக்கடியும், அதிகளவிலும், தொடர்ச்சியாகவும் குடிப்பவர்களுக்கு மாரடைப்பு ஏற்படும் ஆபத்து பெருமளவில் ஏற்படுமென்பது மருத்துவ-விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது. அதிகளவு குடிப்பவர்களுக்கு அதிகளவில் மாரடைப்பு ஏற்படும். ஏனெனில் சிகரட் புகையானது இரத்தத்தை மாசடையச் செய்வதுடன் அதிலுள்ள 'நிகோட்டின்' என்கின்ற இரசாயனப் பொருள் இரத்தக் குழாய்களில்கொழுப்புப் படிவத்தை அதிகரிக்கின்றது. இதனுலேயே இவர்களுக்கு அதிகளவில் மாரடைப்பு ஏற்படுகின்றது.

## உயர் இரத்த அழுத்தம்

உடலில் உயர் இரத்த அழுத்த வியாதி இருப்பதும் மாரடைப்பு ஏற்படுவதற்கு ஓர் முக்கிய காரணமாகும். குறிப்பாக கட்டுப்பாடில்லாத உயர் இரத்த அழுத்தம் திடீர் மாரடைப்பை ஏற்படுத்தும்.

## ஏனைய காரணிகள்

★ உடல் நிறை உடல் பருமன் கூடிய ★ உடலுழைப்பு உடற்பயிற்சி குறைந்தவர்கள் ★ உடலில் ஏற்கனவே 'டயபிற்றிஸ்' என்கின்ற நீரிழிவு வியாதி உள்ளவர்கள் ★ மற்றும் ஒருவிதமான விசேட இயல்புகளைக் (Personality) கொண்டவர்களுக்கும் மாரடைப்பு ஏற்படும் ஆபத்து அதிகரித்துக் காணப்படுகிறது. உதாரணமாக காரணமில்லாமல் அடிக்கடி ஆத்திரப்படுபவர்கள், வாழ்க்கையில் உயர் இலக்குகளை அடையவிரும்புபவர்கள், மனதில் அழுத்தம், கவலை உள்ளவர்கள், வாழ்க்கையில் நெடுகிலும் போட்டியான சூழ் நிலையில் வாழ்பவர்களுக்கு மாரடைப்பு ஏற்படும் ஆபத்து அதிகரித்துக் காணப்படுகின்றது.

## அறிகுறிகள்

நடு நெஞ்சில் அல்லது இடதுபுற நெஞ்சில் கடுமையான நெஞ்சுவலி ஏற்படுதல்- மரணபயம் ஏற்படுதல் Fear Imminent Death) நெஞ்சிலேற்படும் வலியானது இடதுபுறக் கையில் உளைச்சலை ஏற்படுத்தும். அத்துடன் கடுமையாக வியர்த்தல், தலைச் சுற்று, தலையிடி, வாந்தி எடுக்க வேண்டும்போன்ற உணர்வு வாந்தி எடுத்தல் மயக்கம் என்பன ஏற்படும். ஆனுலும் உடலில் ஏற்கனவே 'டயபிற்றிஸ், வியாதி உள்ளவர்கள் உயர் இரத்த அழுத்தவியாதி உள்ளவர்கள் மற்றும் வயது முதிர்ந்தவர்களுக்கு மாரடைப்பு நெஞ்சில் எந்தவிதமான வலியும் ஏற்படாமலும் தோன்றும் (Silent Heart attack) மேலும் மூச்சுத் திணறல், மார்பு துடித்தல், களைப்பு என்பன ஏற்படும்.

## சிகிச்சை முறை

மாரடைப்பினுல் திடீரென மரணம் ஏற்படுவதனுல் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். உடனடியாகச் சிகிச்சை அளிக்கப்படல்வேண்டும். நெஞ்சில் வலி ஏற்படுகின்றபோது, குறிப்பாக நாற்பது வயதிற்கு பின்னர் நெஞ்சில் வலி, இடதுகை உளைதல் போன்ற பிரச்னைகள் ஏற்படுகின்றபோது அலட்சியம் செய்யாது அருகிலுள்ள மருத்துவரிடம் அல்லது மருத்துவமனையில் காட்டி சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும். கடுமையான நெஞ்சுவலியை தவிர்க்க மோர்பின், பெத்தடீன் போன்ற மருந்துகளும், மூச்சுத் திணறலுக்கு ஒக்ஸிஜனும் இருதயத்தின் வேலைப் பளுவைக் குறைப்பதற்கு லஸிக்ஸிம் கொடுக்கப்படும். கட்டாய ஓய்வு கொடுக்கப்படும். மேலும் நோயின் கடுமைக்கேற்ப சிகிச்சை அளிக்கப்படும்.

## சில ஆலோசனைகள்

★ உடல் நிறை, உடல் பருமன் கூடியவர்கள தமது உடல் நிறையைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முயற்சி செய்யவேண்டும். சைக்கிளோடுதல், நடத்தல், ஓடுதல் விளையாட்டுக்களில் நாள்தோறும் ஈடுபடுதல், வீட்டுத் தோட்டம் செய்தல் போன்ற ஏதேனும் நாள் தோறும் செய்வதன் மூலம் உடல் நிறையைக் கட்டுப்படுத்தலாம். ★ அடிக்கடியும் அதிகளவிலும் குறிப்பாக கொழுப்புச் சத்து உணவுகள் உண்பதை தவிர்க்கவேண்டும். ★ தமது உடலில் ஏற்கனவே நீரிழிவு வியாதி, உயர்இரத்த அழுத்த வியாதி, உள்ளவர்கள் தமக்குரிய 'கிளினிக்குகளுக்கு' ஒழுங்காக செல்வதோடு அங்கு தரப்படுகின்ற ஆலோசனைகளையும் மருந்துகளையும் ஒழுங்காக எடுத்துத் தமது வியாதி நிலையை பூரண கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். இதன் மூலம் மாரடைப்பு ஏற்படுவதனை தவிர்க்கலாம். சிகரட், பீடி, சுருட்டு, புகைப்பவர்கள் படிப்படியாகக் குறைத்து முற்றாக நிறுத்த முயற்சி செய்யவேண்டும். இது மாரடைப்பு ஏற்படுவதைக் குறைக்க பெருமளவில் உதவும்,

★ மதுபானம் அடிக்கடியும் அதிகளவிலும் குடிப்பவர்களும் படிப்படியாகக் குறைத்து முற்றாக நிறுத்துவதன் மூலம் மாரடைப்பு ஏற்பட்டு வேலைத்தலங்களிலும் வீதிகளிலும், வீடுகளிலும், நித்திரையிலும் திடீர்மரணம் ஏற்படுவதைத் தடுத்து அனைவரும் நீண்டகாலம் ஆரோக்கியமாக வாழலாம். (சி)

---

ஜனதிபதி தேர்தலின் பின்

# சிறுபான்மை இனத்தின் கதை தொடர்கதைதானு?

— இரா. சம்பந்தன்

[கொழும்பு]

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனதிபதி முறை இருந்தால் ஜனதிபதியைத் தெரிவு செய்வதில் சிறுபான்மையினருக்கும் ஒரு வகையில் பங்கு உண்டு என்று கருதப்படுகிறது. ஆனுல் அது அந்த தேர்தல் வரை தான் அதன் பின்னர் எல்லாம் மறந்த கதையாகிவிடும்.''

திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க ஜனதிபதியாக தெரிவுசெய்யப்பட்டமை குறித்து மகிழ்ச்சி தெரிவித்த தமிழர் விடுதலைக்கூட்டணி பொதுச்செயலாளர் சம்பந்தன் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனதிபதி முறை ஒழிப்பு பற்றி குறிப்பிடுகையில் இவ்வாறு கூறினுர்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது: தேர்தல் காலத்திற்கு மாத்திர மல்லாது சிறுபான்மை மக்கள் ஆட்சி அதிகார பகிர்வில் கூடிய அதிகாரம் கொண்டிருப்பார்களேயானுல் அது பயன்தரக்கூடியதாக அமையும். நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனதிபதி முறையில் சிறுபான்மையினர் தொங்கிக் கொண்டிருப்பதில் எதுவித பயனுமில்லை.

இனப்பிரச்னையை தீர்ப்பதில், திருமதி சந்திரிகா கொண்டுள்ள சமாதான முயற்சியை நாடு அங்கீகரித்துள்ளது. காமினி திசநாயக்காவின் கொலையை அடுத்து எதிரணியினர் மேற்கொண்ட விஷமத்தனமான பிரசாரங்களையும் முறியடித்து நாடு அவருக்கு இந்த அங்கீகாரத்தை வழங்கியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அரசியலை கூர்ந்து பகுத்தறியும் தன்மை கொண்டு அறிந்து அதனை மக்கள் செயலிற் காட்டியுமுள்ளனர், வெறும் உணர்ச்சிக்கு மாத்திரம் உந்தப்படாமல், நாட்டு நன்மை கருதி ஆக்கபூர்வமான கொள்கைகளை கருத்தில் எடுத்தும் மக்கள் தீர்ப்பு வழங்கியிருக்கிறுர்கள் என்று மேலும் கூறினுர். (கே - சி)

---

பொதுத் தேர்தல் வன்முறை:

# ஜனதிபதி ஆணைக்குழு விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

பொதுத்தேர்தலை தொடர்ந்து வன்செயல் குறித்து நியமிக்கப்பட்ட ஜனதிபதி ஆணைக் குழு நேற்று முன்தினம் காலை கொழும்பில் கூடியது

பொதுசன ஐக்கிய முன்னணியின் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த எஸ். பி. ஜயசிங்க என்பவர் கொலை செய்யப்பட்டசம்பவம் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கொலை செய்யப்பட்டவரின் மனைவி ஆணைக்குழு முன் சாட்சியமளிக்கையில்: தனது கணவர் அகலகமகொட சந்தியில் வைத்து ஐ. தே. க. ஆதரவாளர்களினுல் தாக்கப்பட்டார் என்றும் பலத்த காயங்களுடன் கொழும்பு ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்லப்பட்ட அவர் அங்கு மரணமானுர் என்றும் தெரிவித்தார்.

தனக்கும் தனது பிள்ளைகளுக்கும் நிவாரணம் வழங்கும்படி அவர் அரசாங்கத்திற்கு விண்ணப்பித்துக் கொண்டார். ரி இ

---

# பரிசுத்த பாப்பரசரை சந்திரிகா நேரில் வரவேற்பார்

(மானிப்பாய்)

பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் அடுத்த ஆண்டு ஜனவரி 20-ம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்வார்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் 20-ந் திகதி வந்திறங்கும் இவரை ஜனதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா விமான நிலையம் சென்று வரவேற்பார்.

அன்றைய தினம் ஏனைய மதத்தலைவர்களும் பரிசுத்த பாப்பரசரை தரிசிக்க செல்வார்கள். பின்னர் ஜனதிபதி மாளிகையில் இடம் பெறும் நண்பகல் விருந்துபசாரத்தின் பின்னர் இனப்பிரச்சினை தீர்வு சம்பந்தமான கலந்துரையாடல்களும் இடம் பெறுமென்று தெரிவிக்கப்படுகிறது.

மறு நாள் 21-ந் திகதி, 1916 ஆம் ஆண்டில் கண்டியில் காலமான ஜோசப் வாஸ் பிதாவின் சமய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பாப்பரசர் உரை நிகழத்தவுள்ளார்.

பரிசுத்த பாப்பரசரை தரிசிக்கவென யாழ். மாவட்டத்திலிருந்து மாத்திரம் 7000 முதல் 10,000 வரையான மக்கள் செல்லவுள்ளனவென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. [71-இ]

---

# பஸ் வான் விபத்து 45 பேர் பலி

ஒரிஸ்ஸாவில் சம்பவம்

(புதுடில்லி)

இந்திய மாநிலமான ஒரிஸாவின் கட்டாக் என்னும் பகுதியில் கடந்த புதன்கிழமை பஸ்ஒன்று வானுடன் நேருக்கு நேர் மோதியதில் 45 பேர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டதாகவும் 38 பேர் காயமடைந்ததாகவும் யு. என். ஐ. செய்தி தெரிவித்தது.

இறந்தவர்களில் பெரும்பாலானுேர் பெண்களும் குழந்தைகளும் என்றும் மகாநதி பாலத்தின் மேலேயே இவ்விபத்து இடம்பெற்றதாக அச் செய்தி மேலும் தெரிவித்தது.

## பல்கலைக் கழகங்களில்

# தொழில்நுட்பத்துறையினை விரிவுபடுத்துதல் அவசியம்

பல்கலைக்கழகச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்கு தற்பாது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஒரு ஸ்தாபனத்தை, ஒரு கல்வி ஸ்தாபனத்தை அதன் நிர்வாகசபையின் அனுமதியுடன் உயர்கல்வி ஸ்தாபனமாக அங்கீகரிக்க இந்தத் திருத்தச் சட்டமூலம் வழங்கி வருகின்றது.

இதைக் வலியுறுத்தி யாழ். பல்கலைக்கழக புவியியற் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கா. குகபாலன் எழுதிய கட்டுரையின் சுருக்கத்தை இங்கு தருகின்றோம்.

1982/83ல் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் 5254 ஆகும். 1986/87 6054 ஆக அல்லது 15.2 வீத அதிகரிப்பினைக் காட்டியுள்ளது. க. பொ. த. உயர்தர பரீட்சைக்கான மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து செல்லுமளவிற்கு பல்கலைக்கழக அனுமதி குறைவாகவேயுள்ளது. பல்கலைக்கழக அனுமதியிலிருக்கும் தடையினை அகற்றுவதன் மூலமே உயர்கல்வி வாய்ப்பினையும் பொருளாதாரவிருத்தியையும் காணலாம். மேலும் பல்கலைக்கழக கல்வி அமைப்புக்கிணைவான உயர் கல்வி அமைப்புக்கள் விருத்தி பெறுமையும் உயர்கல்வி வாய்ப்பினைத் தடை செய்கின்றது. அத்துடன் 1943ல் பல்கலைக்கழக கல்விக்கு விண்ணப்பித்தோரில் 56.8 வீதமானோர் உள்நுழைய 1972ல் 10.8 வீதமானோரும் 1977ல் 5.9 வீதமானோரும், 1987ல் 4.0 வீதமானோரும் உள்நுழைந்தனர். இதனைக் கருத்திற் கொள்ளின் க.பொ.த. உயர்தரப் பரீட்சையானது போட்டிப் பரீட்சையாக உருவெடுத்துள்ளதுடன் பல்கலைக்கழகம் நுழையத் தகுதியிருந்தும் வெளியே நிற்க வேண்டிய நிலை துர்ப்பாக்கியமே. இதன் விளைவு மாணவர்களிடையே மனவிரக்தியை ஏற்படுத்தி தொடர்ந்தும் உயர்கல்வியில் நாட்டம் கொள்வதைத் தடுக்கின்றது.

இளைஞர் சம்பந்தமான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையின்படி பல்கலைக்கழகங்களில் அமைதியின்மை ஏற்பட்டு வருவதால் குறுகிய காலத்தில் கல்வித் தரத்தைப் பாதிப்பது மட்டுமல்லாது நீண்டகாலத்தில் அது முற்றிலும் பல்கலைக்கழகக் கல்வி அமைப்பையே சீர்குலைக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பல்கலைக்கழகங்கள் அடிக்கடி மூடப்படுவதால் தங்கள் திறமையினையும் தங்களது வாழ்க்கையிலும் மாணவர் பருவத்திலும் மிகுந்த உற்பத்தித் திறன் மிக்க காலப்பகுதியையும் விரயம் செய்து கொண்டிருக்கின்றனர் எனவும் பல்கலைக்கழகத்தில் அடிக்கடி யேற்படும் குழப்பநிலை காரணமாக கற்றல், கற்பித்தல் குறிக்கோள்களை முற்றாக நிறைவேற்ற முடியாதபடியால் பட்டதாரிகள் தரம் பாதிக்கப்படுகிறது என பல கல்விமான்கள் தெரிவித்துள்ளனர். அதுமட்டுமல்லாது பல்கலைக்கழகங்கள் ஸ்தாபிக்கப்பட்ட காலத்திலும்கூட அனுமதிக்கான கோரிக்கை அதிகரித்துக் கொண்டிருந்த போதிலும் 1000 மாணவர்களுக்காக முன்னர் தயாரிக்கப்பட்ட திட்டங்களை 4000 மாணவர்களுக்கு இடமளிப்பதற்காக மாற்ற வேண்டி இருக்கின்றது.

1980களில் புதிய உயர்கல்வியினை விரிவுபடுத்த மாகாணக் கல்லூரிகள், பிரதேச கல்லூரிகள் ஸ்தாபிக்கப்பட்டு வரினும் அதன் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இந்தியாவில் உள்ளது போன்ற கல்லூரிகள் ஸ்தாபிக்கப்படல் வேண்டும். அல்லது வெளிவாரி மாணவரின் கல்வி நலனில் அனுதாபத்துடன் அணுகுவதுடன் சகல பல்கலைகழகங்களிலும் வெளிவாரி பட்டப்படிப்புகள் ஆரம்பித்தும் வேண்டும்.

அண்மைக்காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உட்பட பல பல்கலைக்கழகங்களில் வெளிவாரிப் பட்டப் பரீட்சைகள் நடாத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது. கலைத்துறை சார்ந்த உயர் கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பதனால் நாட்டின் பொருளாதார விருத்தி ஏற்பட போவதில்லை என பல கல்விமான்கள் கருதுகின்றனர். எனவே விரிவான தொழில்நுட்ப துறையினை எல்லா பல்கலைக்கழகங்களிலும் விரிவுபடுத்தல் அவசியமாகின்றது. கலைத்துறை மாணவர்களின் அனுமதி படிப்படியாக வீழ்ச்சியடைந்து செல்கின்றது. 1982/83ல் 2180 ஆகவிருந்தது. 1986 87ல் 1943ஆகக் குறைவடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

### உதைபந்தாட்டம்: இன்று சாம்பியன் மோதல்

யாழ். உதைபந்தாட்ட லீக்கினுல் விளையாட்டுக்கழகங்களிடையே நடாத்தப்பட்டுவரும் உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டியின் 'ஏ' பிரிவு ஆட்டத்தின் இறுதி சாம்பியன் மோதல் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது,

இந்த இறுதி மோதலில் யாழ்ப்பாணம் கிறீன்பீல்ட் கழகமும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் மோதுகின்றன, வி

### தெரிந்து கொள்ளுங்கள்

★ ஒரே நாளில் மூன்று அரசாங்கங்களுக்குள் மாறிய பெருமை பிரான்ஸில் 'டன்கிங்' குக்கு உண்டு. ஜூன் 28, 1658 அன்று காலை ஸ்பானில் வசம் இருந்தது நண்பகல் போரில் அது பிரெஞ்சு வசமாயிற்று. மாலையிலோ, போரில் இங்கிலாந்து வெற்றி பெற்று அவர்கள் கைக்கு அது மாறியது.

★ ஹாங்காங்கில் 6 மாதம் கோடைகாலம். 6 மாதம் மழைக்காலம். இந்த இரண்டையும் தவிர வேறு பருவவகள் கிடையாது அங்கே.

★ இந்துமகா சமுத்திரத்தில் காணப்படும் அபிசால மீனுக்கு வாலில்தான் கண்கள் இருக்குமாம்!

### தாமரை மலர்

தாமரைமலர் எட்டுநாள் வரை காலையில் மலர்ந்து, மாலையில் குவியும் இயல்புடையது. இதில் முதல் நாள் மலர்ச்சியில் தான் தேன் இருக்கும், மறு நாள் தேன் இருக்காது.

விஞ்ஞானம்

## வானொலி பிறந்த கதை

வானொலி இல்லா வீட்டிற் குடியிருக்க வேண்டாம்! என்று கூறுமளவிற்குவானொலி எங்கும் பரவி விட்டதல்லவா? இது எப்படி உருவானது.

கம்பியில்லாமலே மின்சார சக்தியால் செய்தி அனுப்ப இயலுமா என்பதுபற்றி ஆராயப் புகுந்தவர் இத்தாலி நாட்டில் 1874 ல் பிறந்த மார்க்கோணி என்ற விஞ்ஞானி. வானவெளியில் மிக நுண்ணிய அலைத்திரள்களாகிய 'ஈதர்' என்ற பொருள் இருப்பதை அவர் நிச்சயித்தார். அதன்மூலம் மின் அலைகள் பரவக்கூடும் என்பதையும் நிச்சயித்தார்.

துணிவோடு ஆராய்ந்தபின் மின் அலைகளைத் தம் விருப்பம் போல இயங்குவதற்கும் அவை தொலைவிலுள்ள மின்சாரக் கருவியில் தாக்குவதற்குமான வழிவகைகளைக் கண்டறிந்தார். 1896 இல் அண்மையிலுள்ள இடங்களுக்கு இவ்வாறு செய்தி அனுப்பும் கருவி அமைக்கப்பட்டது.

மின் அலைகளின் வேகத்தையும் அசைவையும் பல்வறு அளவுகளாக மாற்றி அமைக்கும் 'ரியூனிங்' (Tuning) முறை வகுக்கப்பட்டது. அவர் தனது ஆய்வைத் தொடர்ந்து நடாத்தி வானொலி என்னும் ஒலி பரப்பியை உருவாக்கினார்.

ஒருவர் பேசினாலோ பாடினாலோ அந்த ஒலியை மின் காந்தத்தினால் மின் அலைகளாக மாற்றி ஈதரின்மூலம் பல திசைகளுக்கும் அனுப்பப்படும். ஒலிவாங்கி அந்த அலைகளை ஏற்று ஒலிபெருக்கியிற் செலுத்தும். அப்போது அந்த அலைகள் பழைய ஒலியின் வடிவாக மாறிப் பேச்சாகவோ, பாட்டாகவோ தெளிவுபட வெளிப்படும்.

இன்று திரான்சிஸ்டர் கண்டுபிடிப்புக்குப்பின் கையடக்கமான வானொலியோடு தெருவில் செல்வோரைக் காண்கின்றோம். அவர்கள் மார்க்கோனிக்கு நன்றிசெலுத்த வேண்டாமோ?

திருமதி அ. கிருஷ்ணவேணி

## சண்டை நல்லதா? சமாதானம் நல்லதா?

ஒரு நாள் — அருச்சுனன் உள்ளத்தில் ''சண்டை நல்லதா? சமாதானம் நல்லதா? என்ற ஐயம் எழுந்தது.

அருகில் இருந்த கர்ணனைக் கேட்டான். கர்வம் கொண்டிருந்த கர்ணன் அருச்சுனனை இகழ நல்ல வாய்ப்புக் கிடைத்தது என்று எண்ணிக்கொண்டு ''சமாதானம் தான் நல்லது. ஏனெனில் ''சண்டை ஒன்று வந்துவிட்டால், நீ என்னிடம் நன்றாக 'வாங்கிக்கட்டுவாய்!'' அப்போது நீ படும் துயரத்தை என்னால் பொறுத்துக்கொள்ள முடியாது!'' என்றான் தன் வீரத்தைத் தானே புகழ்ந்து கொண்டு!

பின்னர் — துரோணரைச் சந்தித்தபோது அதே கேள்வியைக் கேட்டான். ''சண்டைதான் நல்லது. ஏனெனில் வெற்றி பெற்றால் நாடு, புகழ் எல்லாம் கிடைக்கும்! என்ற பதில் கிடைத்தது.

அருச்சுனனுக்குத் திருப்தி ஏற்படவில்லை. நேரே பீஷ்மரிடம் சென்று அதே கேள்வியைத் தொடுத்தான்.

''அருச்சுனா! சண்டையை மேற்கொண்டாலும், சமாதானத்தை மேற்கொண்டாலும், ஈற்றில் தருமமே வெல்லும்! சமாதானமே சாலச் சிறந்தது என்றார். அருச்சுனனுக்குக் குழப்பம் அதிகரித்தது

பின்னர் — வேதவியாசர் என்ற முனிவர் அத்தினாபுரத்திற்கு வந்தபோதும் அதே கேள்விதான்!

''தருணத்திற்குத் தக்கபடி பாவித்தால் இரண்டுமே நல்லனவே!'' என்றார் அந்த மாமுனிவர். அருச்சுனனுக்குக் குழப்பம் தணிந்தது. ஆனால் பூரண தெளிவில்லை!

வன வாசத்திற்குப் பின் — கண்ணன் பாண்டவர்களுக்காகத் தூது போகும்வேளை அருச்சுனன் அதே கேள்வியை எழுப்பினான் கண்ணனிடம்.

''காலமறிந்து மேற்கொள்ளப்படின் இரண்டும் சிறந்தனவே. இப்போதைக்குச் சமாதானமே நல்லது. துரியோதனன் அதர்மத்தைத் தொடர்ந்தால்...!''

கண்ணன் சொல்லி முடிக்கவில்லை. ஏனெனில் அருச்சுனன் முகத்தில் தெளிவு தெரிந்தது!

குறிப்பு: சுப்பிரமணிய பாரதியாரின் கட்டுரை ஒன்றைத் தழுவி எழுதப்பட்டது.

சிவா

# ஞாயிறு மஞ்சரி

## யுத்தத்திற்கு பின்

யுத்தத்திற்குப் பின் என்ன என்று கேட்டால், சிறு குழந்தைகள்கூடக் கைகொட்டிச் சிரிக்கும். யுத்தத்திற்குப் பின் சமாதானம் என்பது சகஜம் தானே? எதற்கு இந்த அனுவசியமான கேள்வி என்று பலர் கேட்கக்கூடும். வெளிப்படையான விகடம் இருக்கட்டும். யுத்தத்திற்குப் பின், நம் நாட்டாரின் வாழ்க்கை எப்படி இருகக்போகிறது? இதைப் பற்றித்தான் என் கவலை. இதைப் பற்றித்தான் நீங்களும் கவலைப்படவேண்டும்.

வாழ்க்கை அகண்டமானது, மாண்பு கொண்டது என்பதை நம்மவர்கள் எப்படியோ மறந்துவிட்டார்கள். காலத்தைப் பயன்படுத்திக்கொள்ள முடியாமல் அதைப் போக்கும் முயற்சியில் நம்மவர்கள் இப்போது ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். இது என்ன கொடுமை!

தருமதேவதைக்கும், சமாதான மாநாட்டிற்கும் தான் நம்மவர்கள் மனுச் செய்து கொண்டிருக்கவேண்டுமா அல்லது அவர்கள் சிந்தனா சக்தியைக் கொண்டு, திடமாகவும், திட்டத்தோடும் யோசித்து, உலகம் போகிற போக்கைக் கூர்ந்து கவனித்து வாழ்க்கையைப் பெருமைப்பட வாழப்போகின்றார்களா?

அல்லது, எங்கள் பரம்பரை மிகத் தொன்மையும், தூய்மையும் கொண்டது. காலத்தால், விதி வசத்தால் தடுமாறி வீழ்ந்து தத்தளித்துக் கொண்டிருக்கிறோம். எங்களுக்குச் சுக வாழ்வும், சுதந்திரப் பிச்சையும் கொடுத்து, எங்களை மேன்மையுறச் செய்யுங்கள்!'' என மண்டி போட்டு, சலாம் செய்து, கெஞ்சிக் கேட்கப் போகிறார்களா?

அல்லது — வாழ்வாவது மாயம், மண்ணாவது திண்ணம் என்று பஜனை செய்து, பிதற்றிக்கொண்டு பஞ்சத்தில் அடிபட்டு எலும்புக் கூடுகளாகக் காட்சி அளிக்கப்போகின்றார்களா?

நொந்த கருடனைக் காக்கை கொத்தும் என்பது உங்களுக்குத் தெரியாதா? இறக்கை ஒடிந்துபோன காக்கையைப் புழுக்கள் உயிரோடு கொன்று தங்களுக்கு உணவு ஆக்கிக் கொள்ளும்,

தயையையும், தாட்சண்யத்தையும் ஒவ்வொரு ஏட்டிலும் காணலாம். வாழ்க்கையில் அவ்வளவாக இப்போது காணமுடியாது.

எனவே — அன்னியர்களிடமிருந்து நமது நாட்டிற்கு ஏற்ற நியாயமும். வாழ்க்கைத் திட்டமும் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது குழந்தைத்தனமாகும், அல்லது பொறுப்பில்லாத் தனமாகும்.

வாழ்க்கையை நடத்தி, அதில் இன்ப துன்பங்களை அனுபவிப்பவர்கள் நாம்தான் அதற்குப் பிற ஏவலாளிகளும் காவலாளிகளும் தேவையே இல்லை.

நமது வாழ்க்கை நம்மைச் சார்ந்ததாகையினாலே, அதப் எப்படி வாழ்வது என்பதை பற்றி நாமே இப்பொழுது முதல் யோசித்துத்தான் ஆக வேண்டும்.

குறிப்பு: சுப்பிரமணிய பாரதியாரின் நெருங்கிய நண்பரான பிரபல எழுத்தாளர் வ. ரா., ஐம்பது ஆண்டுகளுக்கு முன் எழுதிய கட்டுரை இது.

வ. ரா

## பலதும் பத்தும்

### சிந்தாமணி;

சிந்தாமணி என்பது தேவேந்திரனுக்கு உரிய தோர இரத்தினம்... அது தன்னை வைத்திருப்பவர் நினைத்தவற்றை எல்லாம் நல்குமாம்!

ஆனால்... நமக்குத் தேவையான அறிவைத்தர தமிழிலே பல சிந்தாமணிகள் உண்டு. வைத்திய சிந்தாமணி, சோதிட சிந்தாமணி, வேதாந்தசிந்தாமணி. இப்படிப் பல.

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சீவகசிந்தாமணியோ. உவமைக் களஞ்சியமாக, திருக்குறள், புறநானூறு போன்றவற்றின் கருத்துக்களையும் கொண்டதாக அமைந்த நூல்.

சமண முனிவரான திருத்தக்கதேவரால் இயற்றப்பட்டது. அதனால்... சமணத்திற்கு எழுந்த 'எதிர்ப்பு நோய்' சிந்தாமணிக்கும் தொற்றிக்கொண்டதாம்!

—மயூரன்

### பிறந்த நேரம்

எல்லோருடைய பிறந்த நேரமும் ஜாதகக் குறிப்பில் தான் இருக்கிறது. ஆனல் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஆர்மன்ட் பிரஸெல் என்பவரின் பிறந்த நேரம் கண்ணில் இருக்கிறது. நோனன் கோர்ட் என்ற ஊரில் 11-07-1849 அன்று இரவு 2.10 க்கு இவர் பிறந்தார். அவருடைய இடக்கண்ணின் கருவிழியில் கடிகார டயல் அமைப்பு இயற்கையாக அமைந்திருந்தது அதில் கடிகார முள் 2-10 என்ற மணியும் காட்டிக் கொண்டிருக்கிறது. இவர் எழுபது வயது வரை வாழ்ந்தார். பிறந்த நேரமும் கடிகார டயலும் கண்ணில் அப்படியே இறுதி வரை இருந்தது.

மணிவாக்கு

நம்பிக்கை, துணிவு, பொறுமை, மகிழ்ச்சி, அன்பு ஆகிய ஐந்து படைகள், எவரிடம் இருக்கின்றனவோ, அவர்களால் வீரப் போர் புரிந்து துன்பத்தைத் தகர்த்தெறிந்து வெற்றிக் கொடியைக் கைப்பற்றிவிட முடியும்.

- தமிழ்வாணன்

# நமது நோக்கு

## உதாசீனமா?

ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பைத் தொடர்ந்து நல்லெண்ண சமிக்ஞையாக ஒருவார காலம் தாக்குதல் நடவடிக்கைகளை நிறுத்தியுள்ளதாகப் போராளிகள் சார்பாக அறிவிக்கப்பட்டன.

உலகின் பல தொடர்புச் சாதனங்களும் இதற்கு முக்கியத்துவம் கொடுத்து வரவேற்றன.

சமாதான நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு இது வழி வகுக்கும் என அரசியற் கணிப்பாளர்கள் கருத்து வெளியிட்டார்கள்.

தமிழ் முஸ்லீம் மக்களின் பேராதரவுடன் பெரு வெற்றி பெற்ற ஜனாதிபதி உடனடியாக எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

தீவிர பிரசாரத்தால் களைத்துவிட்ட ஜனாதிபதி சற்று ஓய்வெடுக்கிறாரோ என்பது சிலரது ஐயப்பாடு.

பிரதி அமைச்சர்கள் நியமனம் ஏற்படுத்தும் தலைவலியாலும் வேறு சில அவசர நடவடிக்கைகளாலும் அவரது கவனம் திசைமாறிவிட்டது என்கிறார்கள் வேறு சிலர்.

ஆனால் - இராணுவத்தினரின் இந்த வார நடவடிக்கைகள் நம்பிக்கையைக் குறைக்கும் செயல்களாகவே அமைந்துள்ளன என்பதை வேதனையோடு சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

சாவகச்சேரிப் பகுதியில் மினி பஸ் பயணிகள் மீது நடாத்தப்பட்ட ஆகாயத் தாக்குதல் எதனைக் காட்டுகிறது?

தம் தொழிலுக்காகக் கடலுக்குச் சென்ற அப்பாவி மீனவர்கள் மீது எடுத்த நடவடிக்கைகளின் நோக்கம் என்ன?

ஆக்கிரமிப்புச் சிந்தனையில் ஊறித் திளைத்தவர்களின் மனப்போக்கில் மாற்றம் ஏற்படவில்லை என்பதை இவை காட்டவில்லையா?

தெற்கிலே - சமாதான முயற்சிகளுக்குத் தெளிவான ஆணை தரப்பட்டிருக்கிறது.

எனவே - ஜனாதிபதி மேலும் தாமதிக்காது உரிய நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும்.

குழப்பி அடிக்கும் உள்நாட்டு வெளிநாட்டுச் சக்திகள் இட்டுக்கட்டும் கதைகளுக்குக் காது கொடுக்க இது தருணமல்ல!

பணம் குவிப்பது தன் நலம்
பணி நடுவது பொது நலம்

# குடாநாட்டு பாடசாலைகளில் 43,500 மாணவர்களுக்கு வகுப்பறை வசதிகள் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளின் கட்டமைப்புக்களை நோக்குமிடத்து யாழ் மாவட்ட கல்வித்திணைக்கள வலயம் ஒன்றில் 37 பாடசாலைகளும், வலயம் இரண்டில் 57 பாடசாலைகளும் முற்றுகக் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன. இவ் வலயங்களில் சேதமுற்றிருக்கும் பாடசாலைகளின் எண்ணிக்கை வலயம் ஒன்றில் 47 பாடசாலைகளும், வலயம் இரண்டில் 188 பாடசாலைகளுமாக மொத்தம் 235 பாடசாலைகள் சேதமுற்ற நிலையில் உள்ளன. இவ்விழப்புக்களின் காரணமாக இன்று குடாநாட்டில் 43,500 மாணவர்களுக்கு வகுப்பறை வசதிகள் தற்பொழுது இல்லையென மதிப்பிடப்படுகிறது.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் அரச திணைக்கழங்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் இணைந்து நடத்திய அனர்த்தங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை இனங்காணல் பற்றிய மூன்றுநாள் கருத்தரங்கின் இறுதிநாள் நிகழ்வில் கலந்துகொண்டு கல்வி அபிவிருத்தித் திட்டம் பற்றி கருத்துரை வழங்கிய யாழ் கல்வித்திணைக்களம் வலயம் இரண்டு பணிப்பாளர் திரு. கந்தசாமி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பிரதேசச் செயலர் கலாநிதி குணராசா தலைமையில் நடைபெற்ற இறுதிநாள் நிகழ்வில் திரு. கந்தசாமி தொடர்ந்து உரையாற்றுகையில்: எமது மக்களின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான செயல் திட்டங்களை உருவாக்க வேண்டியது எமது கடமையாகும். யாழ் மாவட்டத்திலுள்ள இரண்டு கல்வி வலயங்களிலும் கைவிடப்பட்ட நிலையிலிருக்கும் 94 பாடசாலைகளையும் சேதத்துக்குள்ளாகியிருக்கும் 235 பாடசாலைகளையும் 1995-96 புனருத்தாரண ஆண்டில் மீளக் கட்டி அமைப்பதற்கு 5000 மில்லியன் ரூபா தேவைப்படுகிறது.

கடந்த காலங்களில் குடாநாட்டில் ஏற்பட்ட சம்பவங்களால் பாடசாலைகளிலிருந்து சேதமுற்ற, களவாடப்பட்ட, தொலைந்துபோன தளபாடங்களின் பெறுமதி இருவலயங்களும் உள்ளடங்கிய தாக 1487-2 மில்லியன் ரூபா. இவை 1995-96ம் ஆண்டில் மீளநிரப்பப்பட வேண்டும். இது தவிர இந்தக் காலப் பகுதியில் சீரழிந்து போன கருவி உபகரணங்களின் மதிப்பீட்டின் படி இவற்றை 1995-96ல் மீள வழங்குவதற்கு 398 மில்லியன் ரூபா தேவைப்படும்.

இது இவ்வாறிருக்க யாழ். குடா நாட்டின் பல பகுதிகளிலுமிருந்து இடம் பெயர்ந்து யாழ். நகரில் தங்கியிருக்கும் மக்கள் உரிய இடங்களில் குடியமர்த்துவதும் இங்குள்ள பாடசாலைகளைப் புனரமைப்புச் செய்வதன் மூலமும் இப்பிரதேசத்தை ஒரு சகஜ நிலைக்கு கொண்டு வரலாம். தீவுப்பகுதியிலிருந்து 17,091 மாணவர்களும் வலிகாமம் வடக்கு வடமராட்சி கிழக்குப் பகுதிகளிலிருந்து 15,113 மாணவர்களும் இன்று இடம் பெயர்ந்து இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

162-சி

## 2-ம் உலக மகாயுத்தத்தின் பின்
# 2 கோடி பேர் மரணம்

(லண்டன்)

1945ம் ஆண்டு இரண்டாம் உலக மகாயுத்தம் முடிவடைந்த பின்னர் உலகில் இதுவரை 2 கோடி 20 லட்சத்துக்கு அதிகமானோர் சண்டைகளின் போது கொல்லப்பட்டார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

கம்யூனிசம் விழ்ச்சியடைந்து கெடுபிடி யுத்தமும் முடிவடைந்த பின்னரும் சிவில் யுத்தமும் செரிலாக்கிளர்ச்சிகளும் பிராந்திய மோதல்களும் அதிகரித்திருப்பதாகவும் கூறப்படுகிறது,

இந்தத் தகவல்களைத் தெரிவிக்கும் 'சண்டையின் விலை' என்ற தலைப்பில் வெளிவந்துள்ள இந்த நூலை இங்கிலாந்தைச் சேர்ந்த ஆய்வுத்தாபனம் ஒன்று வெளியிட்டுள்ளது.

ம-சி

## பொ. ச. மு. அரசு
# அமைதியை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை

(கொழும்பு)

நாட்டில் தற்போதைய சூழ்நிலையில் அவசர கால சட்ட நீடிப்பு அவசியமான போதிலும் பொதுசன ஐக்கிய முன்னணிஅரசாங்கம் நாட்டில் அமைதியைஏற்படுத்தபோதிய நடவடிக்கை எடுக்கவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

எனவே அவசர கால சட்ட நீடிப்பு வாக்கெடுப்பின் போது நாம் இம்முறை கலந்து கொள்ள போவதில்லை யெனவும் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இடம் பெற்ற அவசர கால நீடிப்பு சம்பந்தமான விவாதத்திற் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். (க-சி

# இன்று 'புலிகளின் குரல்' 4 ம் ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

புலிகளின் குரல் நான்காம் ஆண்டு நிறைவுவிழா இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர்மன்ற கலா மண்டபத்தில் நடைபெறும்

இந் நிகழ்வில் கலைபண்பாட்டுக்கழக துணைப்பொறுப்பாளர் திரு. அன்பரசன் வரவேற்புரையையும், நிதர்சனம் பொறுப்பாளர் திரு. நா. தமிழன்பன் தலைமையுரையையும் ஆசியுரைகளை யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. நா. சண்முகலிங்கன் யப்பான் கச்சுயின் பல்கலைக்கழக ஆய்வாளர் திருமதி மனோன்மணி சண்முகதாசும் நிகழ்த்துவர்.

சிறப்புரையை கலை பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை, விடுதலைப் புலிகள் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் நிகழ்த்துவர்.

பரிசில்களை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு.ப. தமிழ்ச்செல்வன் வழங்குவார். தமிழீழ தேசியத் தலைவரின் கையொப்பம் இட்ட சான்றிதழ்களும் கேடயங்களும் வழங்கப்படும்.

நன்றியுரையை புலிகளின் குரல் நிர்வாக இணைப்பாளர் திரு. இ. இராஜேஸ்வரன் நிகழ்த்துவார். கலைநிகழ்ச்சிகளாக சிறுவர் நிகழ்ச்சி, வாத்தியப்பிருந்தா, நாடகம், நாட்டிய நாடகம் என்பன இடம் பெறும்.

# இராசி பலன்

20 - 11 - 1994
ஞாயிற்றுக்கிழமை

(தமிழுக்கு கார்த்திகை 4)

துதியை பி. ப, 4-34 வரை, ரோகிணி மு. ப. 7-40 வரை, சித்தயோகம் இராகுகாலம் மாலை 4-54 முதல் 6-04 வரை. சுபவேளை காலை 9-09 முதல் 10-39 வரை.

மேடம்: எதிர்பாராத பதவி பணவரவு, கலந்துரையாடல்

இடபம்: கடமை பாதிப்பு, பணமுடை, அலைச்சல்

மிதுனம்: புதிய ஸ்தானம், தெய்வீகச் செலவு, பாராட்டு

கடகம்: குடும்ப மனஸ்தாபம், தொழில் கஷ்டம், பதற்றம்

சிங்கம்: தொழில் லாபம், தியானம், குடும்பசுகம்

கன்னி: இனிய சந்திப்பு, சுபகாரியம், பொதுப்பணி

துலாம்: தொழில் நஷ்டம், கற்பனை, வயோதிபர் கவலை

விருச்சிகம்: மனப் பயம். அமைதிக் குறைவு, காரியத் தடை

தனுசு: துணிச்சலான செயல், மனப்பிராந்தி, பயணம்

மகரம்: அதிகாரிகள் பாராட்டு, தற்பெருமை, புத்திரர் உதவி

கும்பம்: ஞானப் பேச்சு, கடும் சினம், துயரச் செய்தி

மீனம்: மனவிரக்தி, அந்நியர் துரோகம், முயற்சித் தேர்வு

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994-11-20
ஞாயிறு இரவு

08-01 - புலிகளின் குரல் வானொலியின் 4-ம் ஆண்டு நிறைவை யொட்டி சிறப்பு நிகழ்ச்சி
08-30 - செய்திகள்
08-40 - புலிகளின் குரல் வானொலியின் 4-ம் ஆண்டு நிறைவை உருவான பாடல்கள்
09-00 - இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

1994-11-21
திங்கள் காலை

07-02 - மாவீர வணக்கம்
07-15 - நீங்கள் கேட்டவை
07-30 - செய்திகள்
07-35 - பத்திரிகை செய்திகள்
07-40 - மாவீரர் வாரத்தை யொட்டி சிறப்பு நிகழ்ச்சி தமிழ்ழன் எழுதிய ''உதயத் தமிழீழம் நல்க உயிர் கொடுத்த மாவீரர்''
08-00 முதல் 09-30 வரை மாவீரர் வார ஆரப்ப நாளையொட்டியும் தமிழீழ தேசியக் கொடியேற்றல் நிகழ்வையொட்டியும் விசேட ஒலிபரப்பு
09-30 - காலை ஒலிபரப்பு யாவும் நிறைவுபெறும்.

## ம வீரர் நினைவாலய திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தியில் மாவீரர் நினைவாலய திறப்பு விழா நாளை 21-ம் திகதி திங்கட்கிழமை காலை 6-30 மணிக்கு நடைபெறும் என்று யாழ். வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

## கிரிக்கெட்: இந்திய 11-3

(புதுடில்லி)

இந்தியாவுக்கும் - மே இந்தியாவுக்குமிடையில் பம்பாயில் நடைபெற்றுவரும் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 2 ம் நாள் ஆட்டம் முடிவடையும்போது இந்தியா தனது 2வது இனிங்ஸில் 3 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 11 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. மனோஜ் பிரபாகர் 7 ஓட்டங்களுடனும், நயன் மொண்டியாவும், வினோத் ஹம்பிளியும் ஓட்டங்கள் ஏதும் எடுக்காத நிலையிலும் ஆட்டமிழந்தனர். மேற்கிந்திய வேகப்பந்து வீச்சாளா பெஞ்சமின் மேற்படி மூன்று விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

முன்னதாக மேற்கிந்திய அணி தனது முதல் இனிங்ஸில் மொத்தம் 243 ஓட்டங்களை எடுத்தது. வெங்கடபதி ராஜு 5 விக்கெட்டுகளை வீழ்த்தினர். ஸ்கோர் விபரம்: 272, 11-3. மே. இந்தியா 143

வி-ரி

# மாவீரர் எழுச்சிவார கூட்டங்கள் சிரமதானங்கள்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் வாரத்தையொட்டி இன்று 20 திகதி இடம்பெறும் சிரமதானங்கள்: பளை இத்தாவில் குண அறிவகம் - சூழல் துப்பரவு செய்தல், சுழிபுரம் பாவாவெட்டிக் குடியிருப்பு, மாவடி துறட்டிப்பனைக் குடியிருப்பு, மானிப்பாய் செல்லமுத்து அட்டகிரிக் குடியிருப்பு துப்பரவு செய்தல்:

கூட்டங்கள்:

உரும்பிராய் ஞானவைரவர் கோவிலடி, உடுவில் மாவீரர்முகாம், உடுவில் கந்தரோடை ஆலடிப் பிள்ளையார் கோவிலடி, புன்னாலைக்கட்டுவன் சந்தி, பளை முகமாலை பொந்தர் குடியிருப்பு.

தீவகக் கோட்டம் சார்பாக துறட்டிப்பனைக் குடியிருப்பு, பூதராசிக் குடியிருப்பு ஆகிய இடங்களில் இரவு 7.30 மணிக்கு கூட்டமும், வீதி நாடகங்களும் இடம் பெறும். -ம

எயர்லங்கா

# தொண்டா குடும்பத்திடமிருந்து 4 கோடி ரூபா அறவிட முயற்சி!

(கொழும்பு)

எயர் லங்கா நிறுவனத்துக்கு அமைச்சர் தொண்டமானின் குடும்பத்தினரால் செலுத்தப்பட வேண்டிய 4 கோடி ரூபாவை அறவிடுவதற்கு எயர் லங்கா நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகின்றது என்று எயர் லங்கா நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தொண்டமான் பொதுசன ஐக்கியமுன்னணியில் அமைச்சராக இருக்கிற காரணத்தால் அவர் குடும்பத்தினரிடம் வருமதியாக உள்ள 4 கேடி ரூபாவை அறவிடுவதற்கு எயர் லங்கா நிறுவனம் தயங்கி வருகின்றது என்றும் குற்றம் சாட்டப்படுகின்றது.

தொண்டமானின் குடும்பத்தினர் இலங்கைக்கும் இந்தியாவுக்கும்பிரயாணம்செய்ததாலும் தொண்டமானின் மகன் சென்னையில் ஏஜென்சி நடத்துவதால் பிறநாட்டுக்கு வியாபாரம் சம்பந்தமாக சென்று வந்துள்ளதாலும் இந்த 4 கோடி ரூபா எயர் லங்கா நிறுவனத்துக்கு செலுத்தப்படவெண்டும் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. -ம-ரி

## குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(மட்டுநகர்)

கடந்த 12-ம் திகதி மட்டக்களப்பில் பொலிஸ் அதிரடிப் படையினர் குடும்பஸ்தர் ஒருவரைச் சுட்டுக் கொன்றுள்ளனர்.

மாணிக்கபோடி சுதாகரன் (32 வயது, ஆரையம்பதி, காத்தான்குடி) என்ற குடும்பஸ்தரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

புலிகளின் குரல்

## வானொலிசை 4ற் கான போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

புலிகளின் குரல் வானொலியின் 4ம் ஆண்டு நிறைவையொட்டி நடைபெற்ற 'வானொலிசை 4க்கான' போட்டி முடிவுகள் வருமாறு:

நாடகம்

1ம் இடம் ''எல்லை'' — செல்வி ந. லோகேஸ்வரி, மதவடி லேன், திருநெல்வேலி.

2ம் இடம் ''முகாரி'' — நாகதயாகரன், கந்தர்மடம்,

3ம் இடம் ''தெளிவு'' — ப. உதயகுமார், அளவெட்டி,

சிறுகதை

1. ''ஆரம்பம்'' — த. சங்கிதன், லெப். கேணல் நவம் அறிவுக்கூடம், சுதுமலை.

2. ''விழிகள்... புதைகுழிகள்'' — செல்வி பிரேமினி சபாரட்ணம், சங்கத்தானை சாவகச்சேரி.

3. ''பருந்துகள்'' ந. இராமநாதன். அரியாலை மேற்கு.

கவிதை

''புதியசூரியர் உதயமாகிறார்'' — செல்வி பாரதிப்பிரியா, கோண்டாவில் கிழக்கு.

''தாயிடம் தனயன் விம்முகிறான்'' — ந. பூங்கண்ணன், வன்னி மாவட்டம், தமிழீழ விடுதலைப் புலிகள்,

''தாயகத்தை நேசி'' — நிலாதமிழின்தாசன், விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு, நடுவப்பணியகம், கொக்குவில்.

## லஞ்சம்பெற்றதாக பொலிஸ் அதிகாரி மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

மருதானை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையம் ஒன்றிடம் நேற்று 2000 ரூபா லஞ்சம் வாங்கியதாக லஞ்ச ஆணையாளர் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பான விசாரணைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டதாகவும் குறிப்பட்ட பணத்தை பெறும்வரையில் வெளிநாட்டு முகவர் நிலையத்தின் பாவனையிலிருந்த தொலைபேசியை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எடுத்துச்சென்று தமது பாதுகாப்பில் வைத்திருந்ததாகவும் லஞ்ச ஆணையாளர் திணைக்களத்தினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

மற்றொரு உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு வழங்குவதற்காக வைத்திருந்த பணத்துடன் கூடிய தபால் உறையையும் மேற்படி திணைக்களத்தினர் கண்டுபிடித்துள்ளனராம். -க-சி

# இனவாத போக்கை சு. க. கைவிட்டது

– ஹமீத் பாராட்டு –

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இனவாதப் போக்கை கைவிட்டிருப்பது வரவேற்கத் தக்க அம்சம் என ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ஏ. சி. எஸ். ஹமீத் குறிப்பிட்டுள்ளார்.

முன்பு ஆளும் கட்சியான ஸ்ரீ.ல. சு.கட்சி இருந்த காலத்தில் இனவாதப் போக்கையே கொண்டிருந்தன. அக்கட்சி இன்று தனது இனவாதப் போக்கை கைவிட்டிருப்பது வரவேற்கத்தக்க அம்சமென்று ஜனாப் ஹமீத் மேலும் தெரிவித்தார். ம- சி- இ

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994-ம் ஆண்டு நவம்பர் மாதம் 20-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/16336/B.

## பொருள் விலை குறைப்பு

(கொழும்பு)

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு பாவனைப் பொருட்கள் பலவற்றின் விலைகள் நாளை திங்கட்கிழமை முதல் குறைக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்தது,

மீன் ரின்' கடலை. சாறி, சாறம் ஆகியவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாகவும் அரசு அறித்துள்ளது. -வி-ரி

தீப்பற்றிய கொரிய கப்பல்

# கடலில் மூழ்கிறது

(கொழும்பு)

தென்பகுதிக் கடலில் கடந்த வாரம் தீப்பற்றி எரிந்த கொரிய நாட்டிக் கப்பலான மங்கோலியா கடலில் மூழ்கும் நிலையிலிருப்பதாகவும் இக்கப்பல் கடலில் மூழ்கினால் கடல் நீர் அசுத்தமடையலாம் என்றும் தெரிவிக்கப்படுறது.

யப்பானில் இருந்து குவைத்துக்கு சர்வதேச கடல் எல்லை வழியாக சென்றுகொண்டிருந்த இக்கப்பலில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக தீப்பற்றிக்கொண்டது. தீயை அணைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அணைக்கமுடியாமல் போய்விட்டது.

இக் கப்பலில் இருந்த 3900 யப்பானிய கார்களும் தீயில் எரிந்து சேதமாகின. -ரி

## காமினி கொலை விசாரணை

(கொழும்பு)

காமினி திசாநாயக்கா கொலை குறித்து இந்தியப் புலனாய்வாளர்கள் விசாரணை நடத்துவதன் மூலம் இலங்கை புலனாய்வாளர் நடத்தும் விசாரணையை விட மேலதிகமாக திருப்பம் எதனையும் ஏற்படுத்திவிட முடியாது என்று கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது. -ரி

# மட்டு. நகரில் சுற்றிவளைப்பு சோதனைகள் அதிகரிப்பு!

(மட்டுநகர்)

மட்டக்களப்பு மாவடி முன்மாரி பிரதேசத்தில் வயல் பிரதேசத்தை உள்ளடக்கிய அனைத்து பகுதிகளையும் சிறிலங்கா பொலிஸ் அதிரடியினர். இராணுவம் மற்றும் தமிழ் தேசத்துரோகிகளும் கூட்டாக இணைந்து பாரிய சுற்றிவளைப்பை மேற்கொண்டுள்ளனர்,

இச்சுற்றி வளைப்பின்போது சுற்றிவளைப்புக்குள்ளான தமிழர்கள் மிக கொடூரமான முறையில் தாக்கப்பட்டுள்ளனர், அத்துடன் ஐவர் கொண்ட குழுக்களாக அனைவரும் கட்டப்பட்டு வவுணதீவு முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டனர்.

முகாம் கொண்டு செல்லப்பட்டவர்களில் நான்கு பேர் பேர் இன்னமும் விடுதலை செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பிலும் அம்பாறையிலும் மேலும் சில சுற்றிவளைப்புகள் இடம்பெற்றுள்ளதாகவும் சோதனை நடவடிக்கைகள் முன்னரவிட தற்பொழுது மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. -ரி

தாக்குதல்களை

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

புலிகள் பெரும் தாக்குதல் நடத்தலாம் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது.

புலிகளின் தாக்குதலை முறியடிக்கும் வகையில் படையினர் எந்நேரமும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது, -ரி

## புதிய இராணுவ தளபதி விரைவில் நியமனம்

(புதுடில்லி)

இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் ஜோஸி மரணமடைந்ததைத் தொடர்ந்து புதிய இராணுவத் தளபதியைத தெரிவு செய்வதில் இராணுவத் தலைமைப்பீடம் தீவிர ஆலோசனை செய்துவருவாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுபற்றி இந்தியப் பிரதமர் நரசிம்மராவ்கருத்து தெரிவிக்கையில் இக்கட்டான இன்றைய காலகட்டத்தில் இந்தியாவின் இராணுவத்தையும், இந்தியாவின் பாதுகாப்பையும் சரியான முறையில் பேணிப் பாதுகாக்கும் திறமை படைத்த ஒருவரைத் தெரிவு செய்வதில் நான் தற்போது அதிக கவனம் செலுத்திவருகின்றேன் என்று கூறினார். -வி-ரி

மாவீரர் வாரம்

(1-ம் பக்கத்தொடர்ச்சி]

ளும் பறக்கவிடப்பட்டுள்ளன.

மாவீரர்வாரத்தை எழுச்சியுடனும் உணர்வு பூர்வமாகவும் அனுஷ்டிக்கும் நடவடிக்கையில் தமிழ்பிரதேசமெங்கும் விழாக்கோலம் பூண்டிருக்கின்றது.

மாவீரர் வார நாட்களில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தவென ஒவ்வொரு பகுதிகளிலும் பந்தல்கள் அமைக்கப்பட்டு மாவீரர்களின் படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியடைந்த நிலையில் நாளை மாவீரர் வாரத்தை அனுஷ்டிக்கும் வகையில மக்கள் அனைவரும் செயற்பட்டு வருகின்றனர்.

கடந்த காலங்களைவிட இம்முறை மாவீரர் வார நிகழ்வுகளில் மக்கள் உணர்வுடன் ஈடுபட்டு வருவதனை அவதானிக்க கூடியதாக இருக்கிறது

நவம்பர் 26ம் திகதி நள்ளிரவு தாண்டும் வேளையில் தமிழர் தேசிய நாளாம் 27ம் நாள் உதயமாகும் போது ஆலய மணிகள் சரியாக 12 மணி ஒரு செக்கனுக்கு மாவீரர் நினைவொலி எழுப்ப மக்கள் எல்லோரும் எழுந்து நின்று 2 நிமிட மௌனம் செலுத்தி 12மணி 2நிமிடத்துக் நிறைவு செய்வர்.

மாவீரர் நினைவொலி நிறைவுபெற மாவீரர் சுடரேற்றல் நிகழ்வு தொடரும் 27ம் திகதி பி.ப. 5 மணிக்கு மாவீரர் நிகழ்வுகள் தேசியக்கொடி இறக்கத்துடன் நிறைவு பெறும், -ரி

மாவீரர்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ரூரை அந்தந்த வட்டங்களில் நடைபெறும் வைபவங்களில் கலந்து மலர் மாலை அணிவித்துச் சுடரேற்றிச் சிறப்பிக்கும் வண்ணம் யாழ். மாவட்ட அரசியல்துறையினர் அறிவிக்கின்றனர்.

கோட்ட, வட்ட ரீதியாக மாவீரர் ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ள இடங்கள் விபரம்;

வலிகாமம் கோட்டம்: யாழ் வட்டம் வட்டச் செயலகம் முன்பாக' ஆரியகுளத்திற்கு அண்மையில், நல்லூர் வட்டம்- நாவலர் மண்டபம், நல்லூர் கந்தசாமி கோவில் முன்றல். கோப்பாய் வட்டம்- நீர்வேலி வாய்க்கால்கரவைப் பிள்ளையார் கோவில் முன்றல். உடுவில் தெல்லிப்பளை வட்டம்; சுன்னாகம் சந்தி, சண்டிலிப்பாய் வட்டம்- மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோவில் முன்றல். சங்கானை வட்டம்- சங்கானைச் சந்தி.

வடமராட்சிக் கோட்டம்; பருத்தித்துறை வட்டம்- கிராமக்கோட்டுச் சந்தி. கரவெட்டி வட்டம்- நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திற்கு அண்மையில். உடுப்பிட்டி வட்டம்- உடுப்பிட்டிச் சந்தி பிள்ளையார் கோவில் முன்றல்.

தென்மராட்சிக் கோட்டம், கைதடி வட்டம்- கைதடிச் சந்தி. சாவகச்சேரி வட்டம்- தபாற்கந்தோர் சந்தி, நகரசபை வளவு. கொடிகாமம் வட்டம்- புகையிரதநிலையம் முன்னால். பளை வட்டம்- இரட்டைக் கேணி அம்மன் கோவில் முன்றல்.

தீவகக் கோட்டம்: கெற்பேலி பண்டிதர் குடியிருப்பு, நாவற்குழி லவனிதா குடியிருப்பு, அரியாலை டயஸ் குடியிருப்பு, மணியரசன் குடியிருப்பு, சாம்சன் குடியிருப்பு, ஸ்ரீபன் (யாழ், புகையிரத நிலையம்) குடியிருப்பு, முஸ்லீம் பகுதிக குடியிருப்பு, நவாலி மயூரன் குடியிருப்பு, வடக்கம்பரை சத்தியக்காடு குடியிருப்பு, சங்கானை நீதவான் குடியிருப்பு, சுழிபுரம் பாணுதெட்டிக் குடியிருப்பு, வட்டு, துணைவி குடியிருப்பு, வடக்கம்பரை பூதராசிக் குடியிருப்பு, சித்தங்கேணி குந்தவி குடியிருப்பு.

மாவீரர் வார ஆரம்ப நாளில் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றுவதற்கு வட்டச் செயலகங்களில் தமிழீழ தேசியக் கொடிகளைப் பெற்றுக்கொள்ளலாம்,

அதேபோல் தமிழீழ மக்கள் தமது வட்டச் செயலகங்களில் மாவீரர் பொதுச் சின்னத்தைப் பெற்றுப் பந்தல் அமைத்து மலர்மாலை அணிவித்து சுடரேற்றி தமிழீழ மாவீரர்களுக்கான வீர வணக்கத்தை மாவீரர் வாரத்திலும், மாவீரர் நாளிலும் செலுத்தலாம் என யாழ்.மாவட்ட அரசியல் துறையினர் அறிவிக்கின்றார்கள், -ரி